TNVR090004622021

மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம், விருதுநகர்.
(சார்பு நீதிமன்றம், விருதுநகர்.)
முன்னிலை ... திரு. R.V. ராஜகுமார், B.L.,
தீர்ப்பாய நீதிபதி/சார்பு நீதிபதி, விருதுநகர்.

2023 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 23 ம் நாள் புதன் கிழமை
எம்.சி.ஓ.பி.எண். 40/2021

சின்னதம்பி ... மனுதாரர்

/எதிர்/

1. மாணிக்கம்
2. கிளை மேலாளர்,
   யுனிவர்சல் சாம்போ ஜெனரல் இன்சூரன்ஸ்
   கம்பெனி லிமிடெட்,
   முதல் தளம், எண்.10/20, பைபாஸ் ரோடு,
   மதுரை 625 010. ... எதிர்மனுதாரர்கள்

மோ.வா.வி.கோ.தீ.மனு.எண்.40/2021 வழக்கானது முதலில் கூடுதல் மாவட்ட நீதிமன்றம், விருதுநகரில் தாக்கல் செய்யப்பட்டு மோ.வா.வி.கோ.தீ.மனு.எண்.12/2021 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி, ஸ்ரீவில்லிபுத்தூர் அவர்களின் நடவடிக்கையின்படி D.No.1342 நாள். 17.08.2021 ம் தேதிய உத்தரவுப்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு மோ.வா.வி.கோ.தீ.மனு.எண்.40/2021 என எண்ணிடப்பட்டுள்ள இந்த மனுவானது இந்நீதிமன்றத்தின் முன்பு 16.02.2023 அன்று இறுதியான விசாரணைக்காக வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. D. விஜய் ஆனந்த் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்

அழைத்தும் ஆஜரின்மையால் ஒருதரப்பாக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், மனுதாரர் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து அளிக்கும்

**உத்தரவு**

கடந்த 03.12.2020 ம் தேதி மதியம் 02.20 மணியளவில் மத்தியசேனை – கன்னிசேரி ரோட்டில் மத்தியசேனை பேருந்து நிறுத்தம் அருகில் நடந்த சாலை விபத்தில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்கு இழப்பீடு ரூ.4,00,000/– கோரி மனுதாரரால் இம்மனு மோ.வா.சட்டம் 1988 பிரிவுகள் 140, 142, 166 உ/இ விதி 3(1)ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>இழப்பீடு குறித்த விபரங்கள் :–</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | இழப்பீடு கோருதல் | – | காயங்களுக்கு |
| 2. | காயமுற்றவர் பெயர் | – | சின்னத்தம்பி<br>த.பெ. முத்தையா |
| 3. | காயமுற்றவர் வயது | – | 43 |
| 4. | காயமுற்றவர் வேலை | – | கட்டிட தொழிலாளி |
| 5. | காயமுற்றவர் வருமானம் | – | ரூ.15,000/– |
| 6. | விபத்து நேரிட்ட நாள், நேரம் | – | 03.12.2020, மதியம்<br>சுமார் 02.20 மணிக்கு |
| 7. | கோரப்பட்ட இழப்பீடு | – | ரூ.4,00,000/– |

**2. <u>மனுவின் சுருக்கம் :–</u>**

விபத்திற்கு முன்பு வரை மனுதாரர் நல்ல திடகாத்திரமாகவும், உடல் ஆரோக்கியத்துடனும், சுறுசுறுப்பாகவும் இருந்தார். விபத்து ஏற்படும்போது மனுதாரருக்கு வயது 43. மனுதாரர் கட்டிட தொழிலாளியாக வேலை செய்து அதன் மூலம் மாதம் ரூ.15,000/– பெற்றுள்ளார். மனுதாரர் கடந்த 03.12.2020 ம் தேதியன்று மதியம் 02.20 மணியளவில் மத்தியசேனை – கன்னிசேரி

ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்காக மத்தியசேனை கிழக்கு தெருவிற்கு செல்வதற்காக மத்தியசேனை பஸ் ஸ்டாப் அருகில் ரோட்டின் இடது புறத்தில் நடந்து செல்லும்போது, அதே ரோட்டில் மனுதாரருக்கு பின்னால் வந்த TN 63 V 4903 என்ற எண் கொண்ட டிப்பர் லாரியை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து மனுதாரர் மீது மோதியதில் மனுதாரருக்கு வலது முழங்காலில் எலும்பு முறிவும், வலது கண் புருவத்தில் இரத்த காயமும், உடல் முழுவதும் காயங்களும், சிராய்ப்பு காயங்களும் ஏற்பட்டது. காயம்பட்ட மனுதாரரை சிவகாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்துள்ளனர். மனுதாரர் மேற்படி மருத்துவமனையில் 03.12.2020 முதல் 19.12.2020 வரை உள்நோயாளியாக தங்கி சிகிச்சை பெற்றார். இந்த காயம் காரணமாக மனுதாரருக்கு அவரது அன்றாட பணிகளை செய்ய முடியவில்லை. மனுதாரருக்கு மூன்று ஆண் பிள்ளைகளும், ஒரு பெண் பிள்ளையும் இருக்கின்றனர். மனுதாரரின் வருமானத்தை நம்பியே அவரது குடும்பம் உள்ளது. மேற்படி விபத்தினால் மனுதாரரால் அவரது வேலையை சரியாக செய்ய முடியவில்லை. அவருக்கு ஏற்பட்ட கொடுங்காயத்தினால் சரளமாக பேச முடியவில்லை. மேலும், சிறிது நேரம் கூட தொடர்ந்து நிற்க முடியவில்லை. அதனால் மனுதாரரின் உடல்நலம், மன நலம் குடும்ப வாழ்வாதாரம் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த விபத்து குறித்து ஆமத்தூர் காவல் நிலையத்தில் 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் மீது கு.எண்.405/2020 ஆக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கானது விருதுநகர், நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 ல் நிலுவையில் உள்ளது. இந்த விபத்தின் விளைவாக மனுதாரருக்கு நிரந்தர ஊனமும், வருமான இழப்பும் ஏற்பட்டுள்ளதோடு, மனுதாரருக்கு ஆபரேசன் செய்யப்பட்டுள்ளதால் பொறுக்க முடியா வலியும், வருத்தம், மன உளைச்சலும் ஏற்பட்டுள்ளதால் எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு மனுவில் கண்ட நஷ்ட ஈட்டை வழங்கக்கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** எதிர்மனுதாரர்கள் அழைத்தும் ஆஜரின்மையால் ஒரு தரப்பாக்கப்பட்டுள்ளார்கள்.

**4. <u>இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனைகள் யாதெனில் :–</u>**

1. இந்த விபத்து யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது?
2. இழப்பீட்டு தொகையை யார் செலுத்த வேண்டும்?
3. மனுதாரருக்கு எவ்வளவு தொகை இழப்பீடாக கிடைக்கத்தக்கது?

**5.** மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. நீ.ம.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் அழைத்தும் ஆஜரின்மையால் ஒருதரப்பாக்கப்பட்டுள்ளனர்.

**6. <u>பிரச்சனை எண்.1 :–</u>**

இந்த விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரின் கவனக் குறைவு தான் காரணம் என்பதை மெய்ப்பிக்க மனுதாரர் தன்னை ம,சா.1 ஆக விசாரித்துக் கொண்டுள்ளார். அவரது சாட்சியத்தில் கடந்த 03.12.2020ம் தேதியன்று மதியம் சுமார் 02.20 மணியளவில் மத்தியசேனை – கன்னிசேரி ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்காக மத்தியசேனை பஸ் ஸ்டாப் அருகில் ரோட்டின் இடதுபுறத்தில் நடந்து செல்லும்போது, அதே ரோட்டில் தனக்கு பின்னால் வந்த TN 63 V 4903 என்ற எண் கொண்ட டிப்பர் லாரியை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து மனுதாரர் மீது மோதி மனுதாரருக்கு வலது முழங்காலில் எலும்பு முறிவும், வலது கண் புருவத்தில் இரத்தக்காயமும், உடல் முழுவதும் காயங்களும், சிராய்ப்பு காயங்களும் ஏற்பட்டதாக சொல்லியுள்ளார். மேற்படி மனுதாரரின் சாட்சியத்தை

நிரூபிக்கும் வகையில் ஆமத்தூர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டட முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் மேற்படி 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரான மாரிச்சாமி என்பவர் பெயர் எதிரியாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல் மேற்படி எதிரி பெயரில் பதிவு செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கை ம.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கின் தீர்ப்புரையானது ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் மேற்படி வழக்கின் எதிரியான மாரிச்சாமி என்பவர் குற்றத்தை ஒப்புக்கொண்டு அபராதம் செலுத்தியதாக சொல்லப்பட்டுள்ளது. எனவே, மேற்படி விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் அதிவேகம், கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் தான் ஏற்பட்டுள்ளது என்பது மனுதாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**7. <u>பிரச்சனை எண்.2 :-</u>**

ஏற்கனவே பிரச்சனை எண்.1ல் விவாதிக்கப்பட்டுள்ளது போல் மேற்படி விபத்திற்கு TN 63 V 4903 என்ற 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான டிப்பர் லாரியின் ஓட்டுநரின் அதிவேகம், அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவான செயலால் விபத்து ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி விபத்துக்கு காரணமான TN 63 V 4903 என்ற டிப்பர் லாரியானது 2ம் எதிர்மனுதாரரிடம் காப்பிடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி காப்பீடானது 26.11.2020 முதல் 25.11.2021 வரை ஊர்ஜிதத்தில் உள்ளது. அதற்கான காப்பீட்டு சான்றிதழ் ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்ட்டுள்ளது. எனவே, மேற்படி விபத்தின்போது மேற்படி 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான மேற்படி வாகனமானது 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதால் மேற்படி 2ம் எதிர்மனுதாரர் மேற்படி 1ம் எதிர்மனுதாரருக்காக இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவராவர் என்று இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

8. <u>பிரச்சனை எண்.3 :-</u>

மனுதாரர் தனது கோரிக்கை மனுவில் பல்வேறு தலைப்புகளில் இழப்பீடு கோரியுள்ளதால் வசதிக்காக அவை தனித்தனியாக விவரிக்கப்படுகிறது.

<u>நிரந்தர இயலாமை :-</u>

மனுதாரர் தனது சாட்சியத்தில் மேற்படி விபத்தில் ஏற்பட்ட காயத்தினால் தனக்கு வலது முழங்காலில் எலும்பு முறிவும், வலது கண் புருவத்தில் இரத்தக் காயமும், உடல் முழுவதும் சிராய்ப்பு காயங்களும் ஏற்பட்டதாகவும் அதற்கு சிவகாசி அரசு மருத்துவமனையில் வலது காலில் ஏற்பட்ட எலும்பு முறிவிற்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு பிளேட் பொருத்தப்பட்டுள்ளதாகவும், கண்ணில் ஏற்பட்ட காயத்திற்கு தையல் போடப்பட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். இருப்பினும் மேற்படி காயங்களினால் மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து அறிய அவர் மருத்துவ குழுவின் முன் ஆஜராகியுள்ளார். மேற்படி மருத்துவ குழுவின் அறிக்கையை இத்தீர்ப்பாயமானது தானாக முன்வந்து நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்துள்ளது. மேற்படி நீ.ம.சா.ஆ.1ல் மேற்படி மனுதாரருக்கு ஏற்பட்ட நிரந்தர ஊனமானது 40% என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ம.சா.ஆ.2 விடுவிப்பு சான்றிதழில் மேற்படி மனுதாரருக்கு பிளேட் பொருத்தப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது. மேற்படி மனுதாரரின் வயது மற்றும் பணியை பொறுத்து ஒவ்வொரு சதவீதத்திற்கும் ரூ.5,000/- என்று 2021 (1) TNMAC 481 என்ற முன் தீர்ப்புரையின்படி தீர்மானித்து 40% ஊனத்திற்காக இழப்பீட்டு தொகையானது 40X5000=2,00,000/- என்று தீர்மானிக்கப்படுகிறது.

<u>வருமான இழப்பு :-</u>

மேற்படி மனுதாரர் அவரது சாட்சியத்தில் தான் கட்டிட தொழிலாளியாக வேலை பார்த்து அதன் மூலம் மாதம் ரூ.15,000/- பெற்று வந்ததாக சொல்லியுள்ளார். ஆனால், அதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல்

செய்யவில்லை. எனவே, அவரது வருமானத்தை கணக்கிட நமது சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த பின்வரும் வழிகாட்டு நெறிமுறை பின்பற்றப்படுகிறது.

**In Andal & Others Versus Avinav Kannan & Another –(CDJ 2018 MHC 8221), our Hon'ble Madras High Court** has held as follows:

> **The CBDT vide Notification No.370142(E)(No.26/2008)(L. No.370/42/3/2008–TPL),dated 13.6.2008 specifies the Cost of Inflation index as mentioned in Column No.3, for the financial year mentioned in the corresponding entry in Column No.2 in the below said Tabular Column:**

| S.No. | Financial Year | Cost of Inflation Index |
|---|---|---|
| 1. | 2001–2002 | 100 |
| 2. | 2002–2003 | 105 |
| 3. | 2003–2004 | 109 |
| 4. | 2004–2005 | 113 |
| 5. | 2005–2006 | 117 |
| 6. | 2006–2007 | 122 |
| 7. | 2007–2008 | 129 |
| 8. | 2008–2009 | 137 |
| 9. | 2009–2010 | 148 |
| 10. | 2010–2011 | 184 |
| 11. | 2012–2013 | 200 |
| 12. | 2013–2014 | 220 |
| 13. | 2014–2015 | 240 |
| 14. | 2015–2016 | 254 |
| 15. | 2016–2017 | 264 |

| | | |
|---|---|---|
| 16. | 2017-2018 | 272 |
| 17. | 2018-2019 | 280 |
| 18. | 2019-2020 | 289 |
| 19. | 2020-2021 | 301 |

**As per the above said index, the Cost of Inflation Index for the year as 2007-2008 is 129 and for the year 2013-2014 will be 220. Now we determine the Notional Income of the deceased in the manner stated below:**

**The Notional Income fixed by the Cost of Inflation Index for the year Hon'ble Supreme x Cost of Inflation Index for the Court of India for the vegetable vendor i.e., Rs.6,500 during the year 2007-2008 year 2013-2014 Cost of Inflation index for the year 2007-2008 Therefore, Income of the deceased is- Rs. 6500 X 220 / 129 = Rs. 11085/-.**

**The Notional Income of the deceased after applying Inflation Index, will be a sum of Rs.11,085. Hence, we re-fix the Notional Income of the deceased as Rs. 11,000 from Rs.6,500. Therefore, we hold that the Tribunal committed an error in fixing the Notional Income of the deceased as stated above.**

மேற்படி வழிகாட்டு முறையின்படி மேற்படி மனுதாரரின் மாத வருமானம் ரூ.6500X301/129=15,167/- என மாத வருமானம் கணக்கிடப்படுகிறது. மேலும். மேற்படி மனுதாரர் வருமான இழப்பிற்காக ரூ.1,00,000/- கோரியிருந்தாலும் அதற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை. இருப்பினும் விடுவிப்பு சான்றிதழ் ம.சா.ஆ.2 ன்படி மனுதாரரின் வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு அதற்கான அறுவை சிகிச்சை செய்யப்பட்டு பிளேட் பொருத்தப்பட்டு 03.12.2020 முதல் 19.12.2020 வரை சிவகாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்துள்ளார். எனவே, அவரது மாத

வருமானம் ரூ.15,000/- என தீர்மானித்து மேற்படி 17 நாட்களுக்கான இழப்பீடாக ரூ.8,500/- (ஒரு நாள் 500 X 17 நாட்கள்) என்று தீர்மானிக்கப்படுகிறது.

**<u>போக்குவரத்து செலவு :-</u>**

மனுதாரரை மருத்துவமனைக்கு எடுத்து சென்ற செலவிற்காக ரூ.10,000/- கோரியிருந்தாலும் மேற்படி மனுதாரர் அதற்கு ஆதரவாக எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. எனவே, மேற்படி மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மையை பொறுத்து மேற்படி மனுதாரருக்கு ரூ.3,000/- போக்குவரத்து செலவாக வழங்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

**<u>கூடுதல் சத்துணவு செலவு :-</u>**

மேற்படி மனுதாரர் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு பிளேட் பொருத்தப்பட்டு 17 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்துள்ளார். ஆனால், அவர் கூடுதல் சத்துணவு செலவிற்காக பணம் எதுவும் கோரவில்லை என்றாலும் அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை காரணமாகவும், விரைவாக நலம் பெரும் பொருட்டு அவருக்கு சத்தான உணவுகள் வழங்கப்படுவது என்பது அவசியமானதாகும் என்பதால் மனுதாரருக்கு ரூ.10,000/- சத்துணவு செலவிற்காக வழங்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

**<u>வலி, துன்பம், மன அதிர்ச்சி, மன உளைச்சல் :-</u>**

மனுதாரர் தன் தரப்பில் தாக்கல் செய்த விடுவிப்பு சான்றிதழ் ம.சா.ஆ.2 ன் அடிப்படையில் மேற்படி மனுதாரருக்கு வலது காலில் ஏற்பட்ட எலும்பு முறிவுக்காகவும், கண் புருவத்தில் ஏற்பட்ட காயங்களுக்காகவும், அதனால் ஏற்பட்ட வலி மற்றும் துன்பத்திற்காக ரூ.50,000/- வழங்கலாம் என்று

தீர்மானிக்கப்படுகிறது.

**ஆடை அணிகலன்கள் :–**

மேற்படி மனுதாரர் ஆடை அணிகலன் வகையில் ரூ.1,000/– செலவானதாக குறிப்பிட்டிருந்தாலும் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. எம். சின்னத்தம்பி எதிர் எஸ். தீபா மற்றும் ஒருவர் 2020(1) TNMAC 617 : CDJ என்ற வழக்கில் ஆடைகளுக்கு ஏற்பட்ட சேதாரத்திற்காக ரூ.3,000/– வரை வழங்கலாம் என்று கூறியிருந்தாலும் ரூ.1,000/– வழங்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

**உடன் இருந்தோர்க்கான செலவுகள் :–**

மனுதாரர் கடந்த 03.12.2020 முதல் 19.12.2020 வரை மொத்தம் 17 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்ததாக சொல்லியுள்ளார். எனவே, அவர் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்த காலமான 17 நாட்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.400/– வீதம் மொத்தம் ரூ.6,800/– (17 X 400) வழங்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

**மருத்துவ செலவுகள் :–**

மேற்படி மனுதாரர் மருத்துவ செலவிற்காக ரூ.1,00,000/– கோரியுள்ளார். ஆனால், மேற்படி மனுதாரர் அதற்கு ஆதரவாக எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. மேலும், மனுதாரர் சிவகாசி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக 17 நாட்கள் சிகிச்சை எடுத்துள்ளார் என்பது தெரிய வருகிறது. இருப்பினும் நமது மேன்மைதாங்கிய சென்னை உயர்நீதிமன்றம் நேசனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், தஞ்சாவூர் எதிர் சிங்காரம் என்ற சிங்காரு மற்றும் சிலர் என்ற வழக்கில் (2014 (1) TN MAC 822 என்ற வழக்கில் கோருரிமையாளருக்கு அவருக்கு ஏற்பட்ட மார்பு மற்றும் தலையில் ஏற்பட்ட

எலும்பு முறிவிற்காக 2 நாள் மற்றும் 7 நாட்களுக்கு அரசு மருத்துவமனையயில் சிகிச்சை பெற்றதற்காக ரூ.50,000/– வழங்கி உத்தரவிட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருந்தாலும் அவருக்கு ஏற்பட்ட மருத்துவ செலவிற்கான ஆவணங்கள் இல்லை என்பதற்காக மருத்துவ செலவுகளை தவிர்க்க இயலாது என்று கூறியுள்ளது. எனவே, இவ்வழக்கில் மேற்படி மனுதாரர் அவரது வலது கால் மற்றும் கண்ணில் ஏற்பட்ட காயத்திற்காக அறுவை சிகிச்சை செய்யப்பட்டு பிளேட் பொருத்தப்பட்டு மொத்தம் 17 நாட்கள் உள்நோயாளியாக சிசிச்சையில் இருந்துள்ளார். மேலும், மருத்துவ குழு அவருக்கு 40% ஊனம் ஏற்பட்டுள்ளதாக கூறியுள்ளது. எனவே, அவருக்கு ஏற்பட்ட மருத்துவ செலவாக ரூ.50,000/–வழங்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

மனுதாரருக்கு விபத்தினால் ஏற்பட்ட செலவுகள் குறித்து விபத்து நஷ்டஈடு கீழ்க்கண்ட தலைப்புகளில் கணக்கிடப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | மனுதாரருக்கு ஏற்பட்ட நிரந்தர இயலாமைக்காக | – | ரூ.2,00,000/– |
| 2. | மனுதாரருக்கு ஏற்பட்ட வருமான இழப்பிற்காக | – | ரூ.8,500/– |
| 3. | மனுதாரருக்கு விபத்து சமயத்தில் ஏற்பட்ட போக்குவரத்து செலவிற்காக | – | ரூ.3,000/– |
| 4. | மருத்துவ சிகிச்சையில் இருந்தபோது கூடுதல் சத்துணவு செலவிற்காக | – | ரூ.10,000/– |
| 5. | மனுதாரருக்கு விபத்து சமயத்தில் ஏற்பட்ட வலி, துன்பம், மன அதிர்ச்சி, மன உளைச்சல் ஆகியவற்றிற்காக | – | ரூ.50,000/– |

| | | | |
|---|---|---|---|
| 6. | மனுதாரருக்கு விபத்தின்போது ஏற்பட்ட ஆடை அணிகலன்களுக்காக | – | ரூ.1,000/– |
| 7. | மனுதாரருக்கு விபத்து ஏற்பட்ட சமயத்தில் அவருக்கு உடன் இருந்தோர்க்கான செலவுகளுக்காக | – | ரூ.6,800/– |
| 8. | மருத்துவ செலவுகளுக்காக | – | ரூ.50,000/– |
| | ஆக மொத்தம் | – | ரூ.3,29,300/– |

மேற்படி கணக்கீட்டின்படி மனுதாரருக்கு ரூ.3,29,300/– இழப்பீடு தொகையாக கிடைக்கக்கூடியது என்று இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக, இம்மனு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டு தொகை ரூ.3,29,300/–யையும், அத்தொகைக்கு மனு தாக்கல் செய்த நாளிலிருந்து செலுத்தும் நாள் வரை ஆண்டுக்கு 7.5% வட்டியுடன் செலுத்த வேண்டும் என்றும், 2ம் எதிர்மனுதாரர் இன்றிலிருந்து 2 மாத காலத்திற்குள் இந்நீதிமன்ற மோ.வா.வி.கோ.கணக்கில் வைப்பீடு செய்ய வேண்டுமென்றும், 2ம் எதிர்மனுதாரரால் தொகை வைப்பீடு செய்யப்பட்டவுடன் மனுதாரர் முழு இழப்பீட்டு தொகை, வட்டி மற்றும் செலவுகளை பெற்றுக்கொள்ளலாம் என்றும், நீதிமன்ற கட்டணம் ஏதும் பாக்கி இருந்தால் இன்றிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் செலுத்த வேண்டுமென்றும், நீதிமன்றக் கட்டணம் அதிகமாக செலுத்தப்பட்டிருந்தால் மனுதாரர் திரும்ப பெற்றுக்கொள்ளலாம் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம்

செய்யப்பட்டு, இன்று 2023ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 23ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

தீர்ப்பாய நீதிபதி/சார்பு நீதிபதி,
விருதுநகர்.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் :–**

ம.சா.1 – திரு. சின்னத்தம்பி

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :–**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | : | முதல் தகவல் அறிக்கை – சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.2 | : | 03.12.2020 முதல் 19.12.2020 வரை சிகிச்சை எடுத்துக் கொண்டதற்கு சிவகாசி அரசு மருத்துவமனை வழங்கிய விடுவிப்பு சான்றிதழ் – அசல் |
| ம.சா.ஆ.3 | : | குற்ற இறுதி அறிக்கை – சான்றிட்ட நகல். |
| ம.சா.ஆ.4 | : | சட்ட மாறுதல் அறிக்கை – சான்றிட்ட நகல். |
| ம.சா.ஆ.5 | : | S.T.C. No.746/2021 என்ற வழக்கில் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, விருதுநகரில் வழங்கப்பட்டுள்ள தீர்ப்புரை – சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.6 | : | TN 63 V 4903 என்ற எண்ணுள்ள லாரியின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை – சான்றிட்ட நகல். |
| ம.சா.ஆ.7 | : | பார்வை மகஜர் – சான்றிட்ட நகல். |
| ம.சா.ஆ.8 | : | வரைபடம் – சான்றிட்ட நகல். |
| ம.சா.ஆ.9 | : | காப்பீட்டு ஆவணம் – நகல் |
| ம.சா.ஆ.10 | : | மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை – நகல் |
| ம.சா.ஆ.11 | : | மனுதாரரின் நிரந்தர கணக்கு அட்டை – நகல் |
| ம.சா.ஆ.12 | : | வங்கி கணக்கு புத்தகத்தின் முன்பக்கம் – நகல் |

**நீதிமன்ற சான்றாவணங்கள் :–**

நீ.ம.சா.ஆ.1 : மனுதாரரின் ஊனச்சான்றிதழ் – அசல்

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :–</u>**

இல்லை

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

தீர்ப்பாய நீதிபதி/சார்பு நீதிபதி,
விருதுநகர்.

சார்பு நீதிமன்றம், விருதுநகர்.
எம்.சி.ஓ.பி.எண்.40/2021
சீரான வரைவு உத்தரவு
நாள். 23.08.2023